# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,153 — 1960 ජූලි 1 වැනි සිකුරාදා — 1.7.1960

12,153 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 157 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 160 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 163 | நாணுவிதம் .. .. .. | — |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### நில அளவைப் பகுதி

#### நில அளவையாளர் பயிற்சிப் பாடசாலை

**பரீட்சை நிகழும் திகதி.**—மேற்கூறப்பட்ட பயிற்சிப் பாடசாலையில் பயிலுவோராக பிரவேசிக்க விரும்புவோருக்குப் போட்டிப் பரீட்சையொன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்னும் மூன்று பாஷைமூலமும் கீழ்வரும் இடங்களில் 1960 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ம், 10 ம் திகதிகளில் நிகழும் :—

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், குருநாக்கல், மட்டக்களப்பு, காலி.

**குறிப்பு.**—போதிய அளவு பரீட்சார்த்திகள் சேராத எந்தத் தானமும் நீக்கப்படும்.

2. **தகுதி.**—(அ) பரீட்சார்த்திகள் இலங்கையர்களாகவும், 19 வயதிற்குட்படாமலும், 25 வயதிற்கு மேற்படாமலும் பரீட்சையின் முதற் தினத்தன்று இருத்தல் வேண்டும். பரம்பரையால் அல்லது பதிவால் இலங்கைப் பிரஜையானவர் இலங்கையராவர்.

(ஆ) பரீட்சார்த்திகள் குறைந்த பட்சம், இலங்கை சிரேஷ்ட தராதரப் பத்திரத்தை கணித சாஸ்திரத்துடன் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது இலங்கை கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரண நிலை) கணித சாஸ்திரம், சிங்களம் அல்லது தமிழ்ப் பாஷை ஆகியவற்றுடன் வேறு நான்கு பாடங்களில் இரு தருணங்களுக்கு மேற்படாத பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3. **தகுதிக்குரிய சாசனங்கள்.**—விண்ணப்பத்துடன் கீழ்வரும் மூல சாசனங்களும் அனுப்பப்படவேண்டும் :—

(அ) பொறுப்புள்ள ஒருவரால் கையொப்பமிடப்பட்ட ஒரு நற்சான்றுப் பத்திரம்.

**குறிப்பு.**—பரீட்சார்த்தி அரசாங்கப் பாடசாலையில் அல்லது உதவி பெறும் பாடசாலையிற் கல்வி பயின்றவராயின் நற்சான்றுப் பத்திரம் அவர் கடைசியாகக் கல்வி பயின்ற பாடசாலையின் அதிபரால் கைச்சாத்திடப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது ஒரு சமாதான நீதவாளுல், வழக்கறிஞரால், நியாய துரந்தரரால் அல்லது நொத்தாரிசால் அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரால், அல்லது வருடம் ஒன்றுக்கு ரூபா 2,400 அல்லது அதற்குமேல் சம்பளம் பெறும் ஒரு அரசாங்க உத்தியோகத்தரால், அல்லது பரீட்சார்த்தியைப் பற்றிய விப்ரத்தை இலகுவில் தரக்கூடியவரும், பிரபலஸ்தருமான ஒருவரால் கைச்சாத்திடப்படலாம். நற்சான்றுப் பத்திரத்தில் அதைக் கொடுத்தவரது பெயர், தொழில், விலாசம் முதலியன தெளிவாகக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவின் அத்தாட்சிப்பத்திரம்.

**குறிப்பு.**—(i) பாடசாலைக்கு அல்லது கல்விக்குரிய உபயோகத்திற்காக வழங்கப்படும் விசேடப் பிறப்புப் பத்திரமோ பிறப்புப் பதிவிடாப்பிலிருந்தோ அனுமதிக்கப்பட்ட சுருக்க அத்தாட்சிப் பத்திரமோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**(ii) சத்தியக் கடுதாசிகள் அல்லது ஞானஸ்நானப் பத்திரங்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுக்குப் பதிலாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.**

(iii) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் கொடுத்ததும் அவர் வழக்கமாக உபயோகிப்பதுமான பெயர் அல்லது அத்தகைய பெயர்கள், பிறப்புப் பத்திரத்தில் உள்ள பெயர் அல்லது பெயர்களோடு மாறுபடுமாளுல் பிறப்புப் பதிவுடாப்பில் அப்பெயரைத் திருத்தி எழுதுவதற்காக, சந்தர்ப்பத்திற்கேற்ப, 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தின் 27 ம் அல்லது 28 ம் பிரிவிற் கூறப்பட்டபடி உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவு (திருத்தச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவிற் திருத்திக் கூறப்பட்ட 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தின் 24 (6) ம் பிரிவின்படி, பிறந்த திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பிறகு பதியப்பட்ட பிறப்புப் பதிவின் ஒரு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி, பிறந்த திகதி சரியென்று உறுதிப்படுத்திய அத்தாட்சிகளை ஆராய்ந்த பின்புதான், நியமனங்கள் செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

(இ) இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்யப்பட்டதற்கு ஒரு அத்தாட்சிப் பத்திரம் அல்லது பரம்பரைமூலம் பிரஜா உரிமை கோரியதை ஏற்றுக்கொண்ட உத்தியோக பூர்வமான மூலக்கடிதம் (பொருத்தமானவிடத்து).

(ஈ) கல்வித் தராதரப் பத்திரம் அல்லது தராதரப்பத்திரம் வழங்கப்படாதிருக்கும் சமயத்தில், உத்தியோகபூர்வமான பிறசாசனம் (உதாரணம்.—தனிப்பட்ட முறையில் மனுப்பண்ணும்) பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும் இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சையின் பெறுபேற்றுப்பத்திரம், அல்லது பரீட்சார்த்தி கல்வி கற்ற பாடசாலையின் அதிபரிடமிருந்து பெற்ற மூலக் கடிதம்.

**சலுகைகள்**—

4. **நிரந்தர உத்தியோகத்தர்கள்.**—(அ) நில அளவைப் பகுதியில் 1960 யூன் 24 ல் நிரந்தர பதவியில் உத்தியோகம் வகிப்பவர்கள் கீழ்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருந்தால், இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் :—

(i) அவர்கள் 2 (ஆ) ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித் தராதரங்களை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) அவர்கள் 1960 செப்டம்பர் 1 ல் 45 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) அவர்களது சேவை திருப்தியானதாக இருந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—1956 ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ந் திகதிக்கு முன்பு நியமிக்கப்பட்டு இப்பரீட்சையில் சித்தியடையும் மேற்கூறிய வகையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அரசாங்க பாஷைக் கொள்கை விஷயத்தில் " முன்பு சேர்ந்தவர்களாகக் " கருதப்படுவார்கள்.

(ஆ) அரசாங்கத்தில் 1960 யூலை 1 ம் திகதிக்கு நேராக முன்பு 4 வருடம் தொடர்ந்த சேவை செய்த நில அளவைப் பகுதி நிரந்தர உத்தியோகத்தர்கள் கீழ் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகட்கு உட்பட்டிருந்தால் இப்பரீட்சையை எடுக்க அனுமதிக்கப்படுவார்கள் :—

(i) அவர்கள் குறைந்தது கேம்பிரிட்ஜ் கனிஷ்ட பரீட்சை அல்லது கல்விப் பகுதியின் கனிஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சை அல்லது கல்விப் பகுதியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடசாலையினது கனிஷ்டப் பாடசாலைப் பத்திரப் பரீட்சையைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) அவர்கள் 1960 செப்டம்பர் முதலாம் திகதி 45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—1956 செப்டெம்பர் மாதம் 24 ந் திகதிக்கு முன்பு நியமிக்கப்பட்டு இப்பரீட்சையில் சித்தியடையும் மேற் கூறப்பட்ட வகையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அரசாங்கப் பாஷை விஷயத்தில் " முன்பு சேர்ந்தவர்களாகக் " கருதப்படுவார்கள்.

**(இ) தற்காலிக உத்தியோகத்தர்கள்.**—நில அளவைப் பகுதியில் தற்காலிக பதவிகளிலிருப்பவர்கள் பின்வரும் நிபந்தனைகட்கு உட்பட்டிருந்தால் இப் பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் :—

(i) அவர்கள் 2 (ஆ) ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித் தாரதரங்களையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) அவர்கள் 1960 செப்டெம்பர் 1 ந் திகதி 45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) அவர்கள் 1960 யூலை 15 க்கு நேராக முன்பு நில அளவைப் பகுதியில் குறைந்தது ஒரு வருட தொடர்ந்த சேவை செய்திருத்தல் வேண்டும். (விண்ணப்பங்கள் ஏற்பதற்கு குறிக்கப்பட்டிருக்கும் கடைசித் திகதிக்கு முன் ஒரு வருடம் தொடர்ந்த சேவை).

(ஈ) அரசாங்கத்தில் 1960 ம் ஆண்டு யூலை மாதம் 1 ந் திகதிக்கு நேராக முன்பு 4 வருடம் தொடர்ந்த சேவை செய்த நில அளவைப் பகுதித் த்ற்காலிக உத்தியோகத்தர்கள் 4 (ஆ) ம் பந்தி நிபந்தனை (i) லும் (ii) லும் கூறப்பட்டுள்ள தாரதரங்களை உடையவர்களாக இருந்தால் இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**இலங்கையில் உள்ள ஐக்கிய இராச்சியச் சேவையால் வேலையிலிருந்து விடப்பட்ட உத்தியோகத்தர்கள்**

(உ) இலங்கையிலுள்ள அந்நிய நாட்டுத் தளங்களை எடுக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் வேலையிலிருந்து 6–7–56 ல் விடப்பட்ட அல்லது 6–7–56 க்குப் பின்பு விடப்பட்ட, அல்லது இனிமேல் விடப்படும், இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சிய ஸ்தாபனங்களினது, இராணுவத்தினரல்லாத இலங்கையராகவுள்ள பொது உத்தியோகத்தர்களும், நாறென்பிட்டியிலுள்ள (ஆண்டெர்சன் நிலையம்) அரச கடற்படைக் கம்பியில்லாத் தந்தி நிலையத்தை திருகோணமலைப் பெரும் பகுதியிலுள்ள பெரிய கரச்சிக்கு மாற்றும் அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம், 27–9–54 ற்குப் பின்பு, வேலையிலிருந்து விடப்பட்ட இந்நிலையத்தினது உத்தியோகத்தர்களும், கீழ்வரும் சலுகைகளைப் பெற அருகதை உடையவர்களாவார்கள் :—

(i) 2 (அ) ம் பந்தியில் கூறப்பட்ட வயது எல்லைக்காக வயதைக் கணிப்பதற்கு, அவர்கள் ஐக்கிய இராச்சிய சேவைகளில் தாங்கள் செய்த சேவை 'தொடர்ந்ததாகவும் திருப்தியானதாகவும் இருந்தால் அச் சேவைக் காலங்களை தங்களது வயதிலிருந்து குறைப்பதற்கு அனும்மதிக்கப்படுவார்கள்.

(ii) 1960 ம் ஆண்டு யூலை மாதம் 1 ந் திகதி அல்லது அதற்கு முன் இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சிய சேவைகளில் 4 வருடம் தொடர்ந்தும், திருப்தியாகவும் சேவை செய்தவர்கள், 2 (ஆ) ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித் தாரதரங்களை உடையவர்களாக இல்லாதிருந்தும், 4 (ஆ) (i) ம் பந்தியில் கூறப்பட்டுள்ள பரீட்சைகளில் ஒன்றிலாவது சித்தியடைந்திருக்கும் பட்சத்தில் இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**குறிப்பு.**—ஐக்கிய இராச்சியச் சேவைகளில் செய்த சேவையின் மூல தாரதரப் பத்திரங்கள் விண்ணப்பங்களோடு இணைக்கப்படல் வேண்டும்.

**சேமப்படையினர்**—(ஊ) சேமப்படையினர்.—முறையான நிரந்தரப் படையில் சேவை செய்த பின்பு சேமப்படைக்கு மாற்றப்பட்ட ஆயுதப் படையினர் பின்வரும் சலுகைகளைப் பெற அருகதையுள்ளவர்கள் :—

(i) 2 (அ) ம் பந்தியில் கூறப்பட்ட வயது எல்லைக்காக வயதைக் கணிப்பதற்கு, முறையான படையில் உள்ள சேவைக்காலத்தைக் கழிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(ii) முறையான படையில் 4 வருடத்திற்குக் குறையாமல் சேவை செய்திருந்தவர்கள் 2 (ஆ) ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித் தாரதரம் இல்லாதவர்களாயிருந்தாலும், 4 (ஆ) (i) ம் பந்தியில் கூறப்பட்டிருக்கும் பரீட்சைகளில் ஒன்றிலாவது சித்தியடைந்திருந்தால், இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

**குறிப்பு.**—ஆயுதப்படைகளில் செய்த சேவையின் மூல தாரதரப் பத்திரங்கள் விண்ணப்பங்களோடு இணைக்கப்படல் **வேண்டும்.**

**செலவைச் சுருக்கும் காரணமாய் வேலையிலிருந்து விடப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள்**

(எ) வேலையிலிருந்து தள்ளப்படாது, அல்லது அதிருப்தியாக வேலை செய்வதின் நிமித்தம் நீக்கப்படாது அல்லது வேலையிலிருந்து தாமே நீங்காது செலவைச் சுருக்கும் காரணமாய் அரசாங்கம் வேலையை முடிவு செய்ததின் நிமித்தம் உத்தியோகத்தை இழந்த அரசாங்க உத்தியோகத்தர்கள் தங்கள் சேவைக்காலத்தை/காலங்களை தங்கள் வயதிலிருந்து கழிப்பதால் 2 (அ) ம் பந்தியிலுள்ள மேற் தொகை வயது எல்லைக்குட்படக்கூடுமானால், அப்படிக் கழிக்கும் சலுகையைப் பெறுவார்கள்.

**குறிப்பு.**—செலவைச் சுருக்கும் காரணமாய் வேலையிலிருந்து விடப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் என்பது நிரந்தர அல்லது தற்காலிக பதவியில் உத்தியோகம் வகித்து வேலையில் அல்லது ஒழுக்கத்தில் அதிருப்தியென்க் கண்டு உத்தியோகத்திலிருந்து நீக்கப்படாத எல்லோரையும் குறிக்கும்.

5. **விண்ணப்பங்கள்.**—இப்பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதற்காக நில அளவையாளர் தலைமை அதிபதியின் கந்தோர், கோட்டை, கொழும்பு, என்னும் விலாசத்தில் 1960 ம் ஆண்டு யூலை மாதம் 12 ந் திகதி வரை பெற்றுக்கொள்ளக் கூடிய பத்திரத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரங்கள் மூன்று பாஷைகளிலும் பெறற்பாலன. இப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது, பரீட்சார்த்திகள் எப் பாஷை மூலம் பரீட்சையை எழுத விரும்புகிறார்கள் என்பதைக் கூறல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் பதிவுசெய்யப்பட்ட தபாலில் 1960 ம் ஆண்டு யூலை மாதம் 15 ந் திகதியன்று பிற்பகல் 2 மணி அல்லது அதற்கு முன்பு நில அளவையாளர் தலைமை அதிபதி, தபால் பெட்டி எண் 506, கொழும்பு, என்ற விலாசத்தை அடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். 1960 ம் ஆண்டு யூலை மாதம் 15 ந் திகதி பிற்பகல் 2 மணிக்குப் பின்பு கிடைக்கும் எந்த விண்ணப்பமும் அங்கீகரிக்கப்படமாட்டாது. விண்ணப்பத்தில் ரூபா 15 பெறுமதியுள்ள முத்திரை அல்லது முத்திரைகள் ஒட்டப்பட்டுக் கையொப்பமிட்டு அழிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7. நில அளவையாளர் தலைமை அதிபதி, ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை அவற்றிற்குரிய பரீட்சார்த்திகளிடம் திருப்பி அனுப்புவார். இப்பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றும் பொழுது ; நில அளவையாளர் தலைமை அதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களையும் அவர்களது கையெழுத்துப் பத்திரங்களையும் பரீட்சையை மேற்பார்க்க நியமிக்கப்படும் உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். இப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி, பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

**8. (i) பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை கண்டிப்பாகப் பிரமாணங்களுக்கமையவே அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தோடு அனுப்பப்பட வேண்டிய சரியான சாசனங்களுடன் அனுப்பப்படாததும் வேறு எந்த விடயத்திலாவது குறைபாடுடையதுமான எந்த விண்ணப்பமும் அங்கீகரிக்கப்படமாட்டாது.**

**(ii) அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் முதலாம் பாகம் 2 ஆம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவை நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளையும் கவனிக்க.**

9. **அடையாளச் சீட்டு.**—எல்லாப் பரீட்சார்த்திகளும் தமது அடையாளத்தைத் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், மேற்பார்வையாளர் திருப்திப்படுமாறு பரீட்சை மண்டபத்தில், நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக கீழ்க் கூறப்படும் ஏதாவதொரு சாசனம் அங்கீகரிக்கப்படும் :—

(அ) தபாற் கந்தோர்கள் தலைமை அதிபதியால் வழங்கப்படும் அடையாளச் சீட்டு.

(ஆ) இப்பரீட்சைத் திகதிக்கு முன் மூன்று வருடத்திற்கு உட்பட்ட காலத்தில் வழங்கப்பட்டதும் செல்லுபடியாகக் கூடியதுமான ஒரு பிரயாண அனுமதிச் சாசனம் (பாஸ்போட்டு).

(இ) இப்பரீட்சை நிகழும் திகதிக்கு முன் மூன்று வருஷத்திற்குள் ஓர் அரசாங்கப் பகுதியின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும், அதற்குரியவரது புகைப் படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு அத்தாட்சிப்பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிறசாசனம்.

**குறிப்பு.**—(i) தபாற் கந்தோர்கள் தலைமை அதிபதியால் வழங்கப்படும் அடையாளச் சீட்டுகளைப் பெறுவதற்குரிய விண்ணப்பப் பத்திரங்களை இலங்கையிலுள்ள எந்தத் தபாற் கந்தோரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(ii) அனுமதிச் சீட்டோடும் கையொப்பப் பத்திரத்தோடும் மேற்கூறப்பட்ட ஏதாவதொரு சாசனத்தைக் கொண்டுவராத எப்பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

10. **பொய்யான விபரங்கள் தருவோருக்குரிய அபராதம் :**

(i) ஒரு பரீட்சார்த்தி இப்பரீட்சையின் பிரமாணங்களின்படி தகுதியற்றவர் என்று காணப்பட்டால், பரீட்சைக்கு முன்போ, பரீட்சை நடக்கும் போதோ, பரீட்சைக்குப் பின்போ, எந்நிலையிலாவது அவரைப் பரீட்சார்த்தியென அனுமதித்தமை தள்ளுபடி செய்யப்படுவதற்கு ஏதுவாகும்.

(ii) பரீட்சார்த்தியால் கொடுக்கப்பட்ட விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவிற்கு உட்படவே பொய்யானவை என்று காணப்பட்டால் அல்லது தேவையான உண்மைகளை மறைக்கும் நோக்கத்துடன் அவர் கொடாது விட்டால் அல்லது அவரது சேவைக் காலத்தில் எந்த நேரத்திலும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராக இருந்தார் என்று நிரூபிக்கப்பட்டால் அவர் உடனே சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(iii) பரீட்சை எடுக்க அனுமதி கொடுத்தமை பரீட்சார்த்தியின் தகுதியை ஒப்புக்கொண்டமையாகாது.

11. பரீட்சார்த்திகள் சிறந்த அங்க அமைப்பும் தெளிவான கண் பார்வையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

12. **பணம் திருப்பிக் கொடுத்தல்.**—எச்சந்தர்ப்பத்திலாவது பரீட்சைக்குக் கட்டணமாகச் செலுத்திய பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

| 13. **பரீட்சைக்குரிய பாடங்கள்** | **புள்ளிகள்** |
|---|---|
| (i) **பாஷையும் வியாசமும்.**— (வியாசம், சுருக்கி எழுதல், பாஷையின் சரியான உபயோகத்தைப் பரீட்சிக்கும் வினாக்கள் ஆகியவற்றைக் கொண்ட $1\frac{1}{2}$ மணி நேர வினாப்பத்திரமாக அமையும்) | 150 |
| (ii) **கணித சாஸ்திரம்.**—(திரிகோணமிதி நீக்கப்பட்டு) கூட்டல் பயிற்சியுடன் கூடிய ஒருமணிநேர வினாப் பத்திரம் .. .. .. | 100 |
| (iii) **திரிகோணமிதி.**—அடுக்குமூலம், சாதாரண திரிகோணமிதி சாஸ்திர கிரியங்களுடன் கூடிய ஒரு மணிநேர வினாப்பத்திரம் .. ... | 100 |
| (iv) **விவேகப்பரீட்சை.**—40 நிமிட வினாப்பத்திரம் .. | 50 |

(v) **படம் வரைதல்.**—மூன்றரை மணிநேர வினாப்பத்திரம், பரீட்சார்த்திகள் அளவு கருவிகளின் துணையின்றி கொடுக்கப்படும் தேசப்படமொன்றின் புற உருவத்தைப் பெருப்பித்து மையினால் கீறி, வர்ணம் தீட்டிப் பெயர்குறித்தல் வேண்டும். இத்தேசப் படத்தின் மாதிரி ஒன்றைப் பரீட்சை எடுக்கவிரும்புவோர் கீழ்வரும் கந்தோர்களில் சென்று பார்க்கலாம்.

(அ) நில அளவையாளர் தலைவர் கந்தோர், கீழ் சதாம் தெரு, கோட்டை, கொழும்பு.

(ஆ) மற்றும் காலி, குருநாக்கல், அனுராதபுரம், வதுளை, கண்டி, திரிகோணமலை, தியத்தலாவை, கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள பெரும்பாக அளவைக் கந்தோர்களிலும் பார்க்கலாம்.

பரீட்சார்த்திகள் கறுப்புப் படம் வரை மை, நீர் நிறப் பூச்சுப் படம் வரைவதற்கு வேண்டிய உபகரணங்கள் ஆகியவற்றைக் கொண்டுவரல் வேண்டும். .. .. .. 150

**குறிப்பு.**—(i) முதல் (v) வரையுமுள்ள பாடங்களுக்குரிய வினாப் பத்திரம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற மூன்று பாஷைகளிலும் இருக்கும். 2 (ஆ) பந்தியில் கூறியுள்ள இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியளிக்கும் பரீட்சையைப் பரீட்சார்த்திகள் எந்த மொழி மூலம் எழுதிச் சித்தியெய்தினார்களோ அந்த மொழியிலேயே குறிப்பிட்ட பாடங்களை எழுதல் வேண்டும். ஆனால் தமிழ் அல்லது ஆங்கிலம் மூலம் சித்தியடைந்த பரீட்சார்த்திகள் விரும்பினால் சிங்கள பாஷை மூலத்திலும் மேற்கூறிய பாடங்களை எழுதலாம்.

(vi) **ஆங்கிலம்.**—(விசேட வினாப் பத்திரம்) .. 100

**குறிப்பு.**—இவ்விசேட பாஷை வினாப்பத்திரம் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்குரிய பாடத்திட்டத்திற்கேற்றதாக அமையும். இவ்வினாப்பத்திரம் தெரிவு செய்யப்படுதற்குரிய தராதரப் பரீட்சைப் பத்திரமாக அமைவதால் இவ்வினாப்பத்திரத்தில் குறைந்தது 30% புள்ளிகளாவது தெரிவு செய்யப்படுவதற்கு எடுத்தல் வேண்டும். இவ் வினாப் பத்திரத்தில் பெறும் புள்ளிகள் பரீட்சார்த்திகளின் போட்டி நிலையை நிர்ணயிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

14. **தெரிவுச் சபை.**—எழுத்துப் பரீட்சையின் பெறுபேற்றுக்களை ஒட்டி ஒரு குறிக்கப்பட்ட தொகையுள்ள பரீட்சார்த்திகள் கொழும்பில் ஒரு தெரிவுச் சபையின்முன் தோற்றுமாறு கேட்கப்படுவார்கள். தெரிவுச் சபைக்கு அழைக்கப்படுவோரின் தொகை நில அளவையாளர் அதிபதியால் தீர்மானிக்கப்படும்.

15. தெரிவுச் சபையால் தெரியப்பட்ட பரீட்சார்த்திகள் நில அளவையாளராகக் கடமையாற்றுவதற்கு ஏற்ற உடல்வலியுற்று இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்கு சுகாதார சேவை அதிபதியால் வைத்திய பரிசோதனை செய்யப்படுவார்கள். இப்பரிசோதனைக்காக ரூபா 5 கட்டணமாக எடுக்கப்படும்.

16. **பயிற்சிப் பாடசாலைக்குப் பிரவேசிப்பதற்குரிய நிபந்தனைகள்.**—

(i) பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பயிற்சிக் காலத்தில் தனது பராமுகத்தால் அல்லது கவலையீனத்தால் இழந்த அல்லது பழுதாக்கிய சம்பத்துக்களினதும் அல்லது உபகரணங்களினதும் பெறுமதியை அரசாங்கத்திற்குக் கொடுப்பதற்கும், தனது பயிற்சியை பயிற்சிப் பாடசாலையில் முடித்தபின்பு, இரண்டாவது தர நில அளவையாளராக மூன்று வருட காலத்திற்கு சேவை செய்வதற்கும், ரூபா 6,000 பெறுமதியான சொத்துள்ள ஒரு அங்கீகரிக்கப்பட்ட பிணையாளியைக் கொண்ட ஒரு உடன்படிக்கையும் ஒப்பந்தமும் செய்துகொள்ளல் வேண்டும்.

சொத்துள்ள பிணையாளிகளை ஏற்படுத்தமுடியாதவர்களுக்கு பயிற்சிக் காலத்தில் மாதமொன்றுக்கு ரூபா 40 ம், பின்பு மூன்று வருட காலத்திற்கு மாதமொன்றுக்கு ரூபா 80 ம் கட்டப்பட வேண்டிய ஒரு அனுக்க உடன்படிக்கைக்குள் பிரவேசிக்கும் சலுகை அளிக்கப்படும். கட்டப்படும் இப்பணத் தொகைகள் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும். இவ்வாறு கழிக்கப்படும் தொகைகள் பயிற்சியாளர் செய்யக்கூடிய குறைகளுக்காக பிணைப்பணமாக வைக்கப்பட்டு, ஒப்பந்தத்திலும் உடன்படிக்கையிலும் உள்ள விதிகளும் நிபந்தனைகளும் முறையாக அனுசரிக்கப்பட்ட பின்பு அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

(ii) பரீட்சார்த்தி பயிற்சிப் பாடசாலைக்குப் பிரவேசிக்கும் திகதி தொடக்கம் ஒப்பந்தமும் உடன்படிக்கையும் அனுசரணைக்கு வரும்.

(iii) நில அளவை மாணவராக தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் 1958 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ந் திகதியின் 428 ம் இலக்கமுள்ள திறைசேரி சுற்றறிக்கையின் 2 (ஆ) (v) ம் பந்தியின்படி " பின்பு சேர்ந்தவர்களாகக் " கருதப்படுபவராயின் அரசாங்கத்தின் பாஷைக் கொள்கைக்கமைய ஏற்கெனவே ஆக்கப்பட்ட அல்லது இதன் பிறகு ஆக்கப்படும் விதிகள் எவற்றிற்கும், குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க பாஷைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கும், இணங்கி ஒழுகுமாறு வேண்டப்படுவார்கள். 13 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பாஷையும் வியாசமும் வினாப்பத்திரத்தை தமிழ் மூலமோ அல்லது ஆங்கில மூலமோ எழுதி நியமனத்திற்கு தெரிவு செய்யப்படும் எல்லாப் பரீட்சார்த்திகளும் தமது தகுதிகாண் நிலைக் காலத்தில் சிங்களம் கற்றல் வேண்டும். இப்பரீட்சார்த்திகள் தங்களது தகுதிகாண் நிலைக்கால முடிவில் அவர்களது நியமனத்தில் உறுதிப்படுத்தப்படுவது அவர்களது திருப்தியான வேலை, நல்லொழுக்கம் என்பனவற்றையும் கீழ்க்காணும் நீக்கத்துடன் சிங்களப் பாஷையில் ஒரு பரீட்சையிலும் சித்தியடைவதையும் பொறுத்திருக்கிறது :—

(அ) பொதுச் சேவையில் " பின்பு சேர்ந்தவர் "களாகக் கருதப்படும் உத்தியோகத்தர்கள் திறைசேரியின் தேர்ச்சிப் பரீட்சையில் சிங்களத்தில் உயர் நிலையிலோ அல்லது சாதாரண நிலையிலோ சித்தியெய்திருந்தால் ;

அல்லது

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சையில் (சாதாரண நிலை) அல்லது உயர்ந்த தராதரமுள்ள பரீட்சையில் சிங்களமொழி மூலமாகச் சித்தியெய்தியிருக்கும் பரீட்சார்த்திகள் ;

அல்லது

(இ) கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சையில் எந்த மொழி மூலத்திலாவது சிங்கள பாஷை ஒரு பாடமாகச் சித்தியெய்தியிருக்கும் பரீட்சார்த்திகள்.

தகுதிகாண் நிலைக்கால எல்லையில் குறிக்கப்பட்ட தேர்ச்சியைச் சிங்களப் பாஷையில் அடையாதவர்கள், இந்த அரசாங்க பாஷையைக் கற்பதற்கு உண்மையான முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்று நில அளவையாளர் தலைமை அதிபதி திருப்தியடைந்தால், அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படாமலும் விடப்படுவர். அதே பரீட்சையில் பின்பு ஒரு நியாயமான கால எல்லைக்குள் சித்தியடைவார்களானால் நில அளவையாளர் தலைமை அதிபதி உசிதாசாரப்படி, அவர்கள் சிரேட்டத்துவக் கிரமத்தில் இழந்த நிலையை மீட்டுக்கொள்ளலாம்.

17. **பயிலுவோருக்குக் கொடுக்கப்படும் வேதனம்.**—பரீட்சார்த்திகளின் தேர்ச்சி திருப்திகரமாக இருக்கும் சமயத்தில் மாதம் ஒன்றுக்கு ரூபா 75 ம், அரசாங்க விகிதப்படி சீவனப்படியும், விசேஷ சீவியப் படியும் வேதனமாக அவர்கள் பெறுவார்கள்.

18. **வேலைக்கு நியமிக்கப்படுதல்.**—(i) இரண்டாந்தர நில அளவையாளராகச் சேவை செய்வதற்குத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்பட்டதும் இப்பயிற்சி பெறும் மாணவர்கள் நியமனங்களைப் பெறுவார்கள். நில அளவையாளர்கள் மூன்று வருட காலத் தகுதிகாண் நிலையில் நியமனஞ் செய்யப்படுவார்கள். இக்காலம் இளைப்பாற்றிச் சம்பளம் பெறுவதற்குச் சேர்த்துக் கொள்ளப்படும். இக்காலத்தில் எந்தத் தருணத்திலாவது அவர்களது வேலை திருப்தியற்றதாகக் காணப்பட்டால் அல்லது அவர்கள் நடத்தைப் பிழைக்காக குற்றவாளியாகக் காணப்பட்டால், அவர்கள் சேவையிலிருந்து நில அளவையாளர் அதிபரால் நீக்கப்படுவார்கள். அப்படி நீக்கப்படும் வேளையில், அவர்கள் தங்களைப் பயிற்றிய செலவுத் தொகையை, அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுக்கவேண்டியவர்களாவார்கள்.

(ii) நியமனங்கள் அரசாங்க சேவை அதிகார சபைச் சட்ட விதிகளுக்கும், நிதி நியதி, பரிபாலன நியதி, பகுதிக் கட்டளைச் சட்டம், மற்றும் அரசாங்கத்தால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் வேறு சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்பட்டுள்ளன.

(iii) அவைகள் காலத்திற்குக் காலம் மாற்றப்படும். அரசாங்க சேவை நிதி, பகுதி முதலியவற்றின் சட்ட ஒழுங்குகளுக்கும், மற்றும் அரசாங்கத்தினது சட்ட ஒழுங்குகளுக்கும் ஏற்ப, வாடகைப்படி ஓய்வு விடுமுறை முதலியனவற்றைப் பெறுவதற்கு உரிமையாளராவார்கள்.

(iv) பிரயாணச் செலவுகள், நிதிப் பிரமாணங்கள் பகுதிப் பிரமாணங்களுக்கேற்ப கொடுக்கப்படும்.

19. **சிரேட்டத்துவக் கிரமம்.**—ஒரே நாளில் நியமனம் பெற்ற நில அளவையாளர்களின் சிரேட்டத்துவக்கிரமம் பயிற்சிப்பாடசாலையில் ஒவ்வொருவரும் கடைசியாக நடக்கும் தகுதிப் பரீட்சையில் எடுத்த புள்ளிகளின் கூட்டுத்தொகையிலிருந்தும், இவ்வறிவித்தலின் 16 ம் பந்தி (iii) ம் பிரிவிலுள்ள நிபந்தனைக்குட்பட்டு நில அளவையாளராகச் சேவைசெய்யும் முதல் மூன்று வருஷ காலத்தில் எடுக்கும் சேவைப் புள்ளியிலிருந்தும் தீர்மானிக்கப்படும்.

20. **வேதனமும் பதவி உயர்வுக்குரிய நிபந்தனைகளும்.**—இரண்டாந்தர நில அளவையாளர்.—வருடம் ரூபா 1,620 இலிருந்து ரூபா 4,620 வரை, 19 தடவை வருடம் ரூபா 120 வீதமும் 4 தடவை வருடம் ரூபா 180 வீதமும், திறமைத்தடை : 2,820 க்கும் ரூபா 3,900 க்கும் முன்பு.

முதல்தர நில அளவையாளர்.—வருடம் ரூபா 3,300 இலிருந்து ரூபா 5,340 வரை, 5 தடவை வருடம் ரூபா 120 வீதமும், 8 தடவை வருடம் ரூபா 180 வீதமும். திறமைத்தடை : ரூபா 4,080 க்கு முன்பு.

விசேடதர நில அளவையாளர்.—வருடம் ரூபா 5,580 இலிருந்து ரூபா 6,780 வரை, 5 தடவை வருடம் ரூபா 240 வீதம்.

முதல் தர நில அளவையாளராக பதவி உயர்வு பெறுவதற்கு இரண்டாம் தர நில அளவையாளர் (நில அளவை) பகுதி கனிஷ்ட பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

இரண்டாந்தர நில அளவையாளராக உறுதிப்படுத்தப்பட்ட பின்பு அந் நில அளவையாளர்கள் இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். முதல்தர நில அளவையாளராகப் பதவி உயர்வு பெறமுன்பு ரூபா 2,820 சம்பளத்தில் ஒருவருடத்திற்கு அவர்கள் சேவை செய்தல் வேண்டும். இவ்வாறே வருடம் ஒன்றுக்கு ரூபா 4,620 சம்பளத்தை அடையும்வரை விசேடதர நில அளவையாளராக பதவி உயர்வுபெற அவர்கள் அருகதையுள்ளவர்களாகமாட்டார்கள்.

நில அளவைப் பகுதி சிரேஷ்டப் பரீட்சையில் சித்தியெய்தும் நில அளவையாளர்கள் எல்லாவிதத்திலும் தகுதியுடையவர்களாகக் காணப்பட்டால் விசேடதர நில அளவையாளர்களாகவும் அல்லது உதவி அத்தியட்சர்களாகவும் பதவி உயர்வு பெற அருகதையுள்ளவர்களாவார்கள்.

இப்பலதரப்பட்ட வேலைகளுக்கு, பதவி உயர்வு வெற்றிடங்கள் உண்டாகும்பொழுதே கொடுக்கப்படும்.

இவ்வுத்தியோகத்தர்கள் நில அளவையாளர் அதிபதிக்கு தமக்குக் கொடுக்கப்பட்ட வேலையைத் திறமையாகச் செய்து முடித்து, திருப்தியைக் கொடுத்தால்தான் சம்பள உயர்வு கொடுக்கப்படும்.

21. விண்ணப்பப் பத்திரங்களுக்கு மனுப்பண்ணும் பரீட்சார்த்திகள், தனது கல்வித் தராதரத்தையும் வயதையும் கூறவேண்டும்.

22. வேண்டிய தராதரங்கள் இல்லாத விண்ணப்பக்காரர்களின் கடிதங்களுக்கு பதில் கொடுக்கப்படமாட்டாது.

23. எழுத்துப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகள், பரீட்சை அதிகாரியால் ஆக்கப்பட்ட " பரீட்சார்த்திகளுக்குரிய பிரமாணங்களுக்கு "க் கட்டுப்பட்டுள்ளவர்களாவார்கள்.

வ. இராசரத்தினம்,
நில அளவையாளர் அதிபதி.

நில அளவையாளர் அதிபதியின் காரியாலயம், கிளை " சி ",
தபால் பெட்டி எண் 506, கொழும்பு,
1960 ம் ஸ்ரீ ஜூன் ஸ்ரீ 24 ந வ.

**குறிப்பு.**—இப்பரீட்சையையொட்டிய எக்கஷ்டத்தையும் நில அளவையாளர் தலைமை அதிபதிக்கு தனிப்பட்ட முறையில் விலாசமிட்டு அனுப்பக் கூடாது.

---

**பேராதனை-குண்டசாலை கமத்தொழிற் பாடசாலைகள்
சான்றிதழ் பயிற்சி வகுப்புக்கள்**

பேராதனையிலும் குண்டசாலையிலும் உள்ள கமத்தொழிற் பாடசாலைகளில் இரண்டாண்டுச் சான்றிதழ் பயிற்சி வகுப்புக்களுக்கு அனுமதி கோரும் மனுக்கள் 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் 15 ம் தேதியுடன் முடிவடையும். இப்பயிற்சி வகுப்பு ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரியதாகும். மனுதாரர்கள் கீழ்க்காணும் தராதரங்களை உடையோராக இருத்தல் வேண்டும்.

**வயது.**—1960 ம் ஆண்டு அக்டோபர் முதலாந் தேதியில் 17 வயதுக்கும் 23 வயதுக்கும் இடைப்பட்டோராக இருத்தல் வேண்டும்.

**கல்வி.**—கமத்தொழிற் சாதனபாடசாலை மாணவர்கள்.—சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களாகவும் கமத்தொழிற் சாதனபாடசாலை ஓராண்டுப் பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

நேரடியாகப் பயிற்சிக்குப் புகும் மாணவர்.—ஆண்கள் விடயத்தில் சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் வேதி நூல் ஒரு பாடமாகவும் எடுத்துச் சித்தியெய்தியவர்களாகவும், அல்லது அந்தத் தராதரத்துக்குரிய வேதிநூல் அறிவுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். பெண்கள் விடயத்தில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் வேதிநூல் ஒரு பாடமாகவும், அல்லது வேறு இதர சாஸ்திர அல்லது வீட்டுப்பணி சாஸ்திர பாடமொன்றை ஒரு பாடமாகவும் எடுத்துச் சித்தியெய்தியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

குண்டசாலைப் பாடசாலைக்கு மட்டுமே பெண்களிடமிருந்து மனுக்கள் அங்கீகரிக்கப்படும். பேராதனையிலுள்ள கமத்தொழிற் பாடசாலையில் சிங்கள மொழியே போதன மொழியாகவிருக்கும். ஆனால் குண்டசாலை கமத்தொழிற் பாடசாலையில் சிங்களமும் தமிழும் போதனமொழிகளாகவிருக்கும். மனுதாரர்கள் சிங்களத்தில் அல்லது தமிழில் விரிவுரைகளைக் கேட்டுக் கற்பதற்கும் பரீட்சைக்கிருப்பதற்கும் தக்க திறமையுடையினராக விருத்தல் வேண்டும்.

மனுதாரர்கள் சிரேஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் வேதிநூற் பாடத்திற் சித்தியெய்தாது விட்டால் அவர்கள் இறுதியாகப் படித்த பாடசாலை அதிபரிடமிருந்து அவர்களுக்குக் கோரப்படும் தராதரங்களுக்குத் தக்க வேதிநூல் அறிவு உண்டென ஒரு சான்றிதழைப் பெற்று அனுப்புதல் வேண்டும்.

தங்கள் இறுதிப்பரீட்சை முடிவுகளை எதிர்பார்க்கும் மனுதார் மனுச் செய்யலாம். மனுச்செய்ய விரும்பும்பரீட்சார்த்திகள் இது விடயமான பூரண தகவல்களுக்கும் மனுப்பத்திரங்களுக்கும் மேலே கூறப்பட்டுள்ளவாறு தாங்கள் தராதரமுடையோர் என்பதனை விளக்கி—அதிபர் கமத்தொழிற் பாடசாலை, பேராதனை, அல்லது அதிபர், கமத்தொழிற் பாடசாலை, குண்டசாலை, தபாற் பெட்டி 58, கண்டி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க.

ஏ. வி. ரிச்சட்ஸ்,
பதில் கமத்தொழிற் அதிபதி.

கமத்தொழிற்றுறை, பேராதனை,
1960 மே மாதம் 21 ம் தேதி.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**1960/61 ம் வருடத்தின் மாத்தறை டிஸ்திறிக் உணவுப் பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான " டெண்டர் " கோரும் அறிவித்தல்**

கொழும்பு யூனியன் பிளேஸ், நம்பர் 330 ஐக்கொண்ட உணவு வர்த்தக வியாபார மந்திரியின் டெண்டர் குழுவின் சபைத் தலைவர் அவர்களால், மாத்தறைப் புகையிரத ஸ்தானத்திலிருந்து மாத்தறை அரசாங்க அரிசிக் களஞ்சியத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கான "டெண்டர்" விண்ணப்பப் பத்திரத்தை 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 26 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரையும் வெலிகம புகையிரத ஸ்தானத்திலிருந்து வெலிகம அரசாங்க அரிசிக்களஞ்சியத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கான " டெண்டர் " விண்ணப்பப் பத்திரத்தை மாத்தறை பதில் உணவு விலைக் கட்டுப்பாட்டதிகாரி அவர்களால் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 26 ந் திகதி, பிற்பகல் 2.30 மணிவரையும் பாரமெடுக்கப்படும்.

2. மாத்தறை பதில் உணவு விலைக் கட்டுப்பாட்டதிகாரியின் கந்தோரில் இருந்து " டெண்டர் " விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பகாரர்கள் " டெண்டர் " விண்ணப்பப் பத்திரங்கள் இரண்டு பிரதிகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 26 ந் திகதி பகல் 12 மணிக்குப் பிறகு இப்பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

3. மாத்தறை அரிசிக் களஞ்சியம் சம்பந்தப்பட்ட " டெண்டர் " விண்ணப்பப்பத்திரம் பெறுவதற்கு முன் ரூபா 250 ஐக் கொண்ட முதலையும், வெலிகம அரிசிக் களஞ்சியம் சம்பந்தப்பட்ட " டெண்டர் " விண்ணப்பப்பத்திரம் பெறுவதற்கு முன் ரூபா 50 ஐக் கொண்ட முதலையும் மாத்தறைக் கச்சேரியில் கட்டிப் பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்பட்டாலன்றி விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டா.

4. மேலதிக விபரங்களை மாத்தறை பதில் உணவு விலைக் கட்டுப்பாட்டதிகாரியின் கந்தோரிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எச். டி. டி. போதிதாஸ,
பதில் உணவு விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்காக,
மாத்தறை டிஸ்திறிக்.

மாத்தறைக் கச்சேரி,
1960 ம் ஸ்ரீ ஜூன் ஸ்ரீ 16 ந வ.

## நீர்ப்பாசன இலாகா

கொழும்பு 8, கொட்டா வீதியிலுள்ள பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் ஆடி மாதம் 26 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிவரையும் களுத்துறைப் பகுதியைச் சேர்ந்த மகுறமஸ்விலவிலுள்ள மகாகும்புற அணைக்கட்டுக்கு, வெள்ளச் சேத திருத்த வேலைகளுக்கும், மேலதிகமாக ஒரு இடைவெளி கட்டுவதற்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுவார்.

கேள்விப் பத்திரங்களைக் கீழ்க்காண்பவரிடம் 6.7.60 தொடக்கம் 22.7.60 வரையும் இவ் விலாகாவில் ரூபா 15,000 க்கும் அதற்கு மேலாகவும் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர், ரூபா 25 கச்சேரியில் கட்டுப்பணம் கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டையோ அல்லது கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் பெயரில் பெற்ற மணி ஓடரையோ சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

அரசாங்கத்துக்குக் கேள்விப் பத்திரங்களின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ ஏற்றுக்கொள்ளவும், நிராகரிக்கவும் உரிமையுண்டு.

மேலும் விபரங்கள் களுத்துறை உட்பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஈ. றணசிங்க,
நீர்ப்பாசன பொறியியலாளர்.
களுத்துறை.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
களுத்துறை, 24.6.60.

---

## கேள்விப் பத்திரம்

கொழும்பு கொட்டா வீதியிலுள்ள மேற் பகுதிப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் 20 மந்தைக் கடவுகள், முத்துருஜவலைத் திட்டத்திற் கட்டுவதற்கான கேள்விப் பத்திரங்களை நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 45,000 அல்லது கூடிய தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 22.7.60 முற்பகல் 11.30 மணிவரையும் ஏற்றுக்கொள்வார்.

இதையிட்டு எல்லா விபரங்களையும், படங்களையும் அத்தோடு இதற்கு வேண்டிய கேள்விப் பத்திரங்களையும் கீழ்க்காணும் காரியஸ்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளுடன் அனுப்பிவைக்க வேண்டும்.

நீர்ப்பாசன இலாகாவில் அல்லது கச்சேரியில் ரூபா 50 கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்று தாம் பதிவுசெய்யப்பட்டவரென அத்தாட்சிப்படுத்தும் ஒப்பந்தக்காரர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் 20.7.60 பிற்பகல் 4.30 மணிவரையும் வழங்கப்படும்.

தற்பொழுது அரசாங்கத்தின் கீழ் ஒப்பந்த வேலைகள் செய்யும் ஒப்பந்தக்காரர்கள் தங்கள் வேலைகள் திருப்தியாக முன்னேறுகின்றன வென்ன அத்தாட்சிப்பத்திரங்கள் அவ்வேலை மேற்பார்வையாளர்களிடமிருந்து பெற்று அவற்றையும் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை நிராகரிக்க அல்லது அவற்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகாரம் அரசாங்கத்தின் பிரத்தியேக் உரிமை.

எப். ஏ. லோபோ,
நீர்ப்பாசன அதிகாரி, கொழும்பு உப பகுதி.

வேலுவன வீதி,
கொழும்பு 9.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு கொட்டா வீதியிலுள்ள மேற் பகுதிப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலரளர் முத்துருஜவலைத் திட்டத்தில் நீர் உட்செல்லும் வெளிச் செல்லும் வாய்க்கால்கள் வெட்டுவதற்கு ஆன கேள்விப் பத்திரங்களை நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 16,000 அல்லது கூடிய தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 22.7.1960 முற்பகல் 11.30 மணிவரையும் ஏற்றுக்கொள்வார்.

இதையிட்டு எல்லா விபரங்களையும் படங்களையும் அத்தோடு இதற்கு வேண்டிய கேள்விப் பத்திரங்களையும் கீழ்க்காணும் காரியஸ்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

நீர்ப்பாசன இலாகாவில் அல்லது கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்று தாம் பதிவுசெய்யப்பட்டவரென் அத்தாட்சிப்படுத்தும் ஒப்பந்தக்காரர்களுக்கு கேள்விப் பத்திரங்கள் 20.7.1960 பிற்பகல் 4.30 மணிவரையும் வழங்கப்படும்.

தற்பொழுது அரசாங்கத்தின் கீழ் ஒப்பந்த வேலைகள் செய்யும் ஒப்பந்தக்காரர்கள் தங்கள் வேலைகள் திருப்தியாக முன்னேறுகின்றன வென்ன அத்தாட்சிப் பத்திரங்கள் அவ்வேலை மேற்பார்வையாளர்களிடமிருந்து பெற்று அவற்றையும் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களை நிராகரிக்க அல்லது அவற்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரம் அரசாங்கத்தின் பிரத்தியேக உரிமை.

எப். ஏ. லோபோ,
நீர்ப்பாசன அதிகாரி, கொழும்பு உப பகுதி.

வேலுவன வீதி,
கொழும்பு 9.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

கொட்டா ரேஏட் கொழும்பு 8 ல் உள்ள மேல் பகுதி, பெரும்பாக பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர், யாவத்தையிலுள்ள நீர்ப்பாசன இலாகா தலைமைக் காரியாலயத்தில் பேச்சுவார்த்தைத் தொடர்பு சாதனங்களும், ஒலிபெருக்குக் கருவிகளும் பொருத்துவதற்கு நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 13,500 அல்லது கூடிய தொகைக்கு பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்து 22.7.60 வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணிவரை முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்.

யாவத்த ரேஏட், கொழும்பு 5 ல் உள்ள கட்டிட உப பகுதி நீர்ப்பாசன பொறியியலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில் இணைப் பிரதிகள் மூலம் விண்ணப்பம் செய்யப்படவேண்டும். இவரிடம் இவ் வேலைக்குரிய படங்களைப் பார்வையிடவும் மற்றும் விபரங்கள் அறிந்து கொள்ளவும் முடியும்.

விண்ணப்பப் பத்திரங்கள் 20.7.60 புதன்கிழமை வரை, காரியாலய வேலை நேரங்களில் நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 13,500 அல்லது கூடிய தொகைக்கு பதிவு செய்யப்பட்டுள்ளவர்களென அத்தாட்சியுடைய ஒப் பந்தகாரர்கள், கச்சேரியில் ரூபா 25 முன்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டைக் சமர்ப்பித்து அல்லது கொழும்பில் உள்ள நீர்ப்பாசன காரியாலயத்தில் கட்டி விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அரசாங்கத்திற்கு எவ்வித கேள்வியுமின்றி, கேள்விப் பத்திரத்தை முற்றுக அல்லது ஏதாவது பகுதியை மட்டும் நிராகரிப்பதற்கும், ஏற்றுக் கொள்வதற்கும் உரிமை உண்டு.

விண்ணப்பதாரிகள் தற்பொழுது அரசாங்கத்தில் ஏதாவது வேறு வேலை ஒப்பந்தமுடையவர்களாயிருப்பின், அவர்கள் தாங்கள் செய்யும் வேலை திருப்திகரமாக நடைபெறுகின்றதென்று, சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் பெற்று தங்கள் விண்ணப்பப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

வி. குமாரசுவாமி,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
கட்டிட உப பகுதி.

நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயம்,
யாவத்த ரேஏட், கொழும்பு 5,
1960 ம் ௵ ஜூன் ௴ 24 ந் உ.

---

## விளம்பரம்

1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கி 1961 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரைக்கும் நீர்கொழும்பு, ஜாயலை புகையிரத ஸ்தானங்களிலிருந்து நீர்கொழும்பு, ஜாயலை அரசினர் பண்டசாலைகளுக்கு உணவுப் பொருட்கள் (பால் உணவு உட்பட) ஏற்றி இறக்கிக் கொடுப்பதற்கு டெண்டர் விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 26 ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணி வரைக்கும் பாதுகாப்பு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு நம்பர் 330, யூனியன் பிளேஸ், கொழும்பு கேள்விச் சபை அக்கிராசனரால் ஏற்றுக்கொள்ளப்படும். மேல் குறித்த காலங்களில் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள்ளடங்கியதும் மொரட்டுவ, வத்தளை, கம்பஹா, வெயாங்கொட, அம்பகாவத்தை, மீரிகம ஆகிய இடங்களிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கு பால் உணவு (கெயர் மாவுத்தூள்) ஏற்றி இறக்கிக் கொடுப்பதற்கு டெண்டர், விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 26 ம் திகதி, செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணி வரைக்கும் கொழும்பு மாவட்ட உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2\. கொழும்பு மாவட்ட உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு விண்ணப்பம் செய்து பெற்றுக்கொண்ட பாரத்திலேயே எல்லா டெண்டர்களையும் இரட்டையாக 1960 ம் ஆண்டு ஆடி மாசம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னதாக சமர்ப்பித்தல் வேண்டும். டெண்டருக்கென குறிப்பிட்ட பாரங்களில் இல்லாத டெண்டர்களை கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. டெண்டர் பாரங்கள் 1960 ம் ஆண்டு ஆடி மாசம் 26 ம் திகதி பிற்பகல் 3 மணிவரையும் கொடுக்கப்படும்,

3. பண்டசாலைகளுக்காயின் ரூபா 250, பள்ளிக்கூடங்களுக்காயின் ரூபா 50 கட்டுப்பணமாக கொழும்புக் கச்சேரியில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்தே டெண்டர் பாரங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

4. முழு விபரங்களும் கொழும்பு உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். டி. சுகததாச,
உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக,
கொழும்பு மாவட்டம்.

கொழும்புக் கச்சேரி,
1960 ம் ஆண்டு ஜூன் மீ 24 ந வ.

---

**களுத்துறை மாவட்டத்தில் உணவுப் பொருட்கள் கொண்டு செல்லல், பரிமாறல் முதலியவற்றுக்கான கேள்விப் பத்திரங்கள்**
**நிதி வருடம் 1960/61**

களுத்துறை மாவட்டத்தில், களுத்துறையிலும், அளுத்காமத்திலும் இருக்கும் அரசாங்க விநியோக நிலையங்களுக்கு உணவுப் பொருட்கள் கொண்டு செல்லல், பரிமாறல் முதலியவைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் களுத்துறை பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 25 ம் திகதி திங்கட்கிழமை மு. ப. 11 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

களுத்துறைக் கச்சேரி, உணவுக் கட்டுப்பாட்டுக் கந்தோரில் பெற்றுக் கொள்ளக்கூடிய பத்திரங்களில் கேள்விப் பத்திரங்கள் (இரு பிரதிகளில்) நிரப்பப்படல் வேண்டும். 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 23 ம் திகதி பி. ப. 12.30 மணிவரையும் கேள்விப் பத்திரத்திற்குரிய பத்திரங்கள் என்னால் வழங்கப்படும். அவைகள் ஒவ்வொரு விநியோக நிலையத்திற்கு மாகக் கேள்விப் பத்திரம் கட்டுப்பணமாக ரூபா 50 க்குரிய ரசீது சமர்ப்பிக்கப்பட்டதன் பேரிலேயே வழங்கப்படும். இக் கட்டுப்பணம் களுத்துறைக் கச்சேரியில் கட்டப்படல்வேண்டும்.

இன்னும் போதிய விபரங்கள் இக்காரியாலயத்திலிருந்து வேலை நடைபெறும் நாட்களின் சாதாரண காரியாலய நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

ஜீ. பீ. பி. டி சில்வா,
களுத்துறை மாவட்டப் பிரதி உணவுக் கட்டுப் பாட்டதிகாரிக்காக.

களுத்துறைக் கச்சேரி,
4.6.60.

---

**விளம்பரம்**

1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடங்கி 1961 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரைக்கும் குருநாக்கல் மாவட்டத்திலுள்ள மாகோ உணவுச் சாலைக்கு உணவுப் பொருட்கள் (பால் உணவு உட்பட) இறக்குமதி ஏற்றுமதி விநியோகம் ஆவன செய்வதற்கு ரெண்டர் விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 26 ம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிவரைக்கும் குருநாக்கல் மாவட்ட உப உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம் ரூபா 50 குருநாக்கல் கச்சேரியில் கட்டுக் காசு கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச் சீட்டுக் கொண்டு வந்து சமர்ப்பித்தால் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 26 ம் திகதி செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணிவரைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

முழுவிபரங்களுக்கு குருநாக்கல் மாவட்ட உப உணவு கட்டுப்பாட்டதி காரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யூ. எப். பேடினன்டோ,
உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக,
குருநாக்கல் மாவட்டம்.

உணவுக் கட்டுப்பாட்டுக் கந்தோர்,
தபால் பெட்டி இல. 18,
குருநாக்கல்.

---

**விளம்பரம்**

1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கி 1961 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரைக்கும் குருநாக்கல் மாவட்டத்திலுள்ள குருநாக்கல் அரசினர் உணவுச்சாலைக்கு உணவுப் பொருட்கள் (பால் உணவு உட்பட) இறக்குமதி ஏற்றுமதி விநியோகம் ஆவன செய்வதற்கு ரெண்டர் விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 26 ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிவரைக்கும் உணவு வர்த்தக வாணிக அமைச்சு நம்பர் 330, யூனியன் பிளேஸ், கொழும்பு கேள்விச்சபை அக்கிராசனரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரம் ரூபா 250, குருநாக்கல் கச்சேரியில் கட்டுக்காசு கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச்சீட்டு கொண்டு வந்து சமர்ப்பித்தால் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 25 ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிவரைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

முழுவிபரங்களுக்கு குருநாக்கல் மாவட்ட உப உணவுக் கட்டுப்பாட்டதி காரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யூ. எப். பேடினன்டோ,
உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக,
குருநாக்கல் மாவட்டம்.

உணவுக் கட்டுப்பாட்டுக் கந்தோர்,
தபால் பெட்டி இல. 18,
குருநாக்கல்.

---

**அறிவித்தல்**

**பிரதி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி, புத்தளம்**

1960/61 நிதி வருடத்தில் புத்தளம் மாவட்டத்திலுள்ள உ. க. ஸ்ரோர்களில் உணவுப் பொருட்களும் "கோ" பால்மாவும் ஏற்றி இறக்குவதற்கும் கொண்டு செல்வதற்குமான கேள்விப்பத்திரங்கள் புத்தளம் மாவட்டம் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கச்சேரியில் பெறக்கூடிய பத்திரத்தில் 2 பிரதிகளில் கேள்விகளை விண்ணப்பிக்கவேண்டும். சிலாபம் திறைசேரிக் கந்தோரில் அல்லது இக்கச்சேரியில் ரூபா 50 கட்டிய கட்டுப்பண ரசீதின் பேரில் கேள்விப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 ம் திகதி பி.ப. 4 மணி வரை கொடுக்கப்படும். இது பற்றிய வேறு விபரங்கள் புத்தளம் பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விக்காரர் விரும்பினால் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரம் அனுமதிக்கப்படுவர். மேலே குறிப்பிட்ட திகதி, நேரத்தின்படி கேள்விப் பத்திரங்கள் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படும்.

ஜே. வி. ஞானப்பிரகாசம்,
புத்தளம் பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்காக.

---

**நீர்ப்பாசன இலாகா**

வடமேல் மாகாண பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் ஆடி மாதம் 27 ம் திகதி (27.7.60) காலை 9.30 மணிவரையும் கீழ்க்காணும் வேலைக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

"வடமேல் மாகாண குருநாகல் மாவட்டத்திலுள்ள கக்வட்டுன ஓயா திட்ட வலதுபக்க துருசு (முதலாம் பாகம்) கட்டல்".

கேள்விப் பத்திரம், கக்வட்டுன ஓயா நீர்ப்பாசன பொறியியலாளர் இடம் இருந்து கேள்வித் தாள்களைப் பெற்று, இருதாள்களில் மனுச் செய்தல் வேண்டும். வேலையின் பெயர் இடதுபக்க உறையில் தெளிவாக எழுதப்படல் வேண்டும். கேள்விப் பத்திரம் பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்கு பதிவு செய்தோ அல்லது நேரில் எடுத்தோ அனுப்ப வேண்டும். வேண்டிய விபரங்களை கக்வட்டுன ஓயா நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் பார்க்கலாம்.

நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 10,000 அல்லது மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்டனர் என்று அத்தாட்சிபண்ணும் ஒப்பந்தக்காரருக்கு மட்டும் நீர்ப்பாசன பொறியியலாளர் ஆடிமாதம் 26 ம் திகதி (26.7.60) நண்பகல் 12 மணிவரையும் கேள்வித் தாள்கள் வழங்குவார். இவர்கள் நீர்ப்பாசன அதிபர் சார்பில் ரூபா 25 இந்த வேலைக்கு முற்பணமாக கச்சேரியில் கட்டி பற்றுச்சீட்டை கேள்வித்தாள்களுக்கு மனுச் செய்யும்பொழுது காட்டவேண்டும்.

நீர்ப்பாசன பொறியியலாளர்,
கக்வட்டுன ஓயா திட்டம்.

மக்குள்பொத்த,
இப்பாகமுவ.

---

**நீர்ப்பாசன இலாகா**

உபபகுதித் தலைமைக் காரியாலயம், வன்னியன்குளம், அநுராதபுரத் திட்டத்தின் கீழ் கனிஷ்ட குமாஸ்தாக்களுக்கு ஆறு நிரந்தர வீடுகள் கட்டுவதற்கு (இலக்கம் 9, 12, 20, 21, 36, 37) வடமத்திய பிரிவு, அநுராதபுர, பெரும்பகுதி நீர்ப்பாசன அதிபர் 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 27 ம் திகதி புதன்கிழமை மாலை 2.30 மணி வரை தனித் தனி கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்.

நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 20,000 அல்லது மேலோ பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

மிஹிந்தலை மகாகனந்தராவ உபபகுதி நீர்ப்பாசன அதிபர் அவர்களிடமிருந்து பெற்ற விண்ணப்பப்பத்திரங்களில் ஒவ்வொரு கட்டிடத்துக்கும் தனித்தனி கேள்விப்பத்திரம் இரண்டு தாள்களில் சமர்ப்பிக்க வேண்டும். அவரிடமிருந்து சகலவிதமான தகவல்களும் விண்ணப்பப் பத்திரமும் ஆடி மாதம் 9 ம் திகதியிலிருந்து 23 ம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்பத்திரம் பெறவிரும்பும் கொந்தராத்துக்காரர்கள் நீர்ப்பாசன அதிபர், மகாகனந்தராவ காரியாலயத்தில் அல்லது கச்சேரியில் ஒவ்வொரு கட்டிடத்துக்கும் ரூபா 25 முற்பணம் கட்டி பற்றுச்சீட்டு சமர்ப்பித்தால் விண்ணப்பப்பத்திரங்கள் கொடுக்கப்படும். தற்சமயம் வேலை ஒப்புக்கொண்டிருக்கும் கொந்தராத்துக்காரர்கள் தாங்கள் வேலை ஒப்புக்கொண்டிருக்கும் உத்தியோகத்தரிடமிருந்து தங்கள் திருப்திபற்றிய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் ஆடி மாதம் 27 ம் திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்குத் திறக்கப்படும். அத்தருணம் கொந்தராத்துக்காரர்கள் சமுகம்தர அனுமதிக்கப்படுவார்கள்.

டி. வி. ஏ. சேனரத்தின,
நீர்ப்பாசன அதிபர்,
மகாகனந்தராவ, உ. ப.

மிஹிந்தலை,
1960 ம் ஆண்டு ஜூன் மீ 20 ந உ.

---

**கேகாலை மாவட்டத்தில் உணவுப் பொருட்கள் ஏற்றிச் செல்வதற்கான கேள்விப் பத்திரம், 1960–61**

கேகாலை மாவட்டத்திற்குள் 1.10.60 தொடக்கம் 30.9.61 வரை உணவுப் பொருட்கள் ஏற்றிச் செல்வதற்கான (ரெண்டர்) கேள்விப் பத்திரம் உணவு வர்த்தக, வியாபார (உணவுப் பிரிவு) அமைச்சின் மனுச்சபை (ரெண்டர் போட்) யின் தலைவரால் (விலாசம் இலக்கம் 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2) 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 27 ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இம்மனுவுக்கு வேண்டிய இரு பத்திரங்கள் கேகாலைக் கச்சேரியில் பிணைப் பணமாக ரூபா 250 கட்டி ஜூலை மாதம் 26 ந் திகதி, செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்குமுன் கேகாலை பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும.

மேலும் விபரங்கள் கேகாலைக் கச்சேரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

க. சிவப்பிரகாசம்,
பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக,
கேகாலை மாவட்டம்.

கேகாலைக் கச்சேரி,
1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 21 ந உ.

---

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

## விற்பனவு

### நீர்ப்பாசனத்துறை

கீழ்க்காணும் உபயோகமற்ற பண்டங்கள் 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 14 ந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு ஜாவத்தை வீதி, கொழும்பு 5 விலுள்ள நீர்ப்பாசனத் திட்டம் வகுக்கும் பதில் அதிபரின் பண்டகசாலையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விற்பனவு நடக்குமன்று காலை 9 மணி முதல் பண்டங்களைப் பார்வையிடலாம்.

வேண்டுவோர் உடனடியாகப் பணத்தைக் கொடுத்து அன்று பிற்பகல் 4 மணிக்கு முன் பண்டங்களை அப்புறப்படுத்தவேண்டும்.

பட்டியல் :

2 அதிகாரிகள் பாவிக்கும் கூடார வெளி மூடிகள் ;
2 பத்து அடி நீள மட்டம் பார்க்கும் கோல்கள் ;
36 பதினைது அடி மட்டம் பார்க்கும் கோல்கள் ;
1 குளிர்ச்சிப் பெட்டி ;
1 நாலாம் இலக்க 4" × 5" புகைப்படம் பிடிக்கும் மடிப்புக் கருவி.

எச். ஓ. ரி. ஸ்காணிவல்,
பதில் நீர்ப்பாசனத்துறை அதிபர்.

ஜாவத்தை,
கொழும்பு 5,
1960 ம் ஆண்டு ஜூன் மீ 21 ந உ.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும்**
**விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரரல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், **விளம்பரங்களுக்கும்** அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு **சகல** அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவு செய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்**—

| | ரூ. | ச. | |
|---|---|---|---|
| ஒரு வருட சந்தா .. | 15 | 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு **பிரி**வுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 | 25 | |
| | 0 | 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 10 | |
| | 0 | 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் **வேண்டும். கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது